விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆனி 31 துல்ஹஃதா 18 இதழ் 144

யாழ்ப்பாணம் புதன்கிழமை 15-7-1987

வடமராட்சி கிராமியவங்கியில்

## ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு தென்மராட்சியில்பெறஒழுங்கு

– அரச அதிபர் நடவடிக்கை

(அலுவலக நிருபர்)

வட மராட்சிப்பகுதியிலுள்ள ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெற்று வந்த ஓய்வூதியக்காரர்களுக்கு தென்மராட்சியில் ஓய்வூதியம் வழங்குவதற்கான ஏற்பாடு களை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் செய்துள்ளார்.

வடமராட்சி பகுதியில் தொடர்ந்து இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கை களினால் சுமார் மூவாயிரத்துக்குமதிகமான ஓய்வூதியக் காரர்கள் கடந்தமே மாதத்திலிருந்துதமது ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததை அடுத்தே அரச அதிபர் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

இந்த ஓய்வூதியதினம்

(5-ம் பக்கம்பார்க்க)

## சென். சேவியர் ஆலயத்தில் ஷெல் விழுந்து ஒரேகுடும்ப அங்கத்தவர் மூவர் பலி! ஐவர் காயம்

[எம். வாமதேவன்]

வடமராட்சிப்பகுதியில் கடந்தஞாயிறன்று இடம்பெற்ற சம்பவமொன்றில் இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல்ஒன்று திக்கத்திலுள்ள சென். சேவியர் ஆலயத்தில் விழுந்து வெடித்ததில், அல்வாயிலிருந்து அங்கு வந்து தஞ்சமடைந்திருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, மகள் ஆகியோர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். அதே குடும்பத்தைச் சேர்ந்த மேலும் ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த ஐந்து பேரில் நால்வர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியிலும் ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

[5ம் பக்கம் பார்க்க]

● கடைசி 4 கப்பல்களைத் தவிர

# இந்திய கப்பல் எதுவும் நுழைவது தடுக்கப்படும்

## உயர்மட்டத்தில் ஆலோசனை

(நமது நிருபர்)

**இந்தியாவிலிருந்து நிவாரணப்பொருள்கள் ஏற்றிவரவிருக்கும் கடைசி நான்கு கப்பலுக்குப் பிறகு வேறு எந்தவொரு இந்திய கப்பலையும் இலங்கைத் துறைமுகம் எதிலும் நுழைவதற்கு இடம்கொடுக்காமல் தடுப்பதுபற்றி உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது.**

இதுபற்றி மிகவிரைவில் ஒரு தீர்மானம் எடுக்கப்படவிருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் கொழும்பு, காலி போன்ற துறைமுகங்களில் களஞ்சிய வசதி இருப்பதால் வடபகுதிக்கு மேலும் உணவு தேவையெனில் இந்திய பொருள்களை இந்த களஞ்சியங்களில் சேகரித்து வைத்து பின்னர் பகிர்ந்து கொடுக்கலாம் என இந்தியாவுக்கு இலங்கை அறிவிக்கவிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

### களஞ்சிய வசதி இல்லையாம்

ஏற்கனவே காங்கேசன்துறைக்கு கொண்டுவரப்பட இந்திய நிவாரணப்பொருள்களை சேர்

(5ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு நியமனத் தாக்கல் ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காலியாகவுள்ள 16 தேர்தற்தொகுதிகளுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் இறுதித்திகதி பின்போடப்பட்டுள்ளது.

இன்று 15ம் திகதியே நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்யும் இறுதிநாளாக இருந்தது ஆயினும் ஜனாதிபதி ஜயவர்த்தனா விடுத்துள்ள பணிப்புரையினையடுத்து இத்திகதி பின்போடப்பட்டுள்ளதாக அரசாங்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய இறுதித்திகதி அறிவிக்கப்படவில்லை

(ஊ)

### அலஸ் ஆணைக்குழு: 23ம் திகதி யாழ் வரும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த மார்ச் மாதம் 30ம் திகதி இடம்பெற்ற இராணுவத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு 'அலஸ் ஆணைக் குழு'வினர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## சகல முகாம்களுக்கும் உஷார் உத்தரவு

[நமது நிருபர்]

எந்த நிமிடத்திலும் எதிர்த் தாக்குதல்களுக்குத் தயாராக இருக்கும்படி. வடபகுதி இராணுவ முகாம்களுக்கு ஆணை இடப்பட்டுள்ளது.

வடமராட்சியில் நெல்லியடி முகாம்மீது புலிகள் நடத்திய எதிர்த் தாக்குதலை யடுத்து ஏனைய இராணுவ முகாம்கள் அனைத்துக்கும் இந்த உத்தரவு

(8ம் பக்கம் பார்க்க)

சுட்டிபுரம் அம்பாள்

## ஆலய அகதிகள்மீது ஹெலி தாக்குதல்

### பலர் பலியென அச்சம்

யாழ்ப்பாணம், புதன்

படையினரின் உத்தரவை யடுத்து சுட்டிபுரம் அம்பாள் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்த வடமராட்சி மக்கள்மீது விமானப்படையினர் நேற்று 'ஹெலி'மூலம் தாக்குதல் மேற்கொண்டனர். இதனால் பலர் பலியாகியிருக்கலாமென அஞ்


[5ம் பக்கம் பார்க்க]

## 1000 தொன் பொருள்களுடன் 'எம். வி. நிக்கோரேட்' விரைவில் வரும்

சென்னை ஜூலை-14

யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு இவ்வார இறுதியில் காங்கேசன்துறை துறைமுகத்திற்குச் செல்லும் கப்பலில் ஏற்றுவதற்காகச்

(5-ம் பக்கம் பார்க்க)



வடமராட்சி அகதிகள் நிவாரணம் தொடர்பாக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் தலைமையில் கூட்டம் நடைபெறுவதை முதல் படத்திலும், கொடிகாமம் ரயில்நிலையத்தில் அகதிகள் நிறைந்திருப்பதை இரண்டாம் படத்திலும் சுட்டிபுரம் அம்பாள் கோயிலில் அகதிகள் உணவு தயாரிப்பதில் ஈடுபட்டிருப்பதை மூன்றுவது படத்திலும் காணலாம். படம்; செந்தில்

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லஇனஜேசி பால்மாடும் நாகுகண்டும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு பொ. கனகரத்தினம் 82/4, கொழும்புத்துறைவீதி, யாழ்ப்பாணம். சி-9834

---

பழைய ஓடுகளும் பனை மரங்களும் விற்பனைக்குண்டு. 76/1 அரசடி வீதி (சிவகுரு நாகர் வீதியை இணைக்கும் ஒழுங்கை) நீராவியடி. சி-9816

---

கோப்பாய் தெற்கு பழைய வீதியில் பாதுகாப்பான நல்ல சுற்றுடலில் இருஅறைகளுள்ள வீடும் நல்ல தண்ணீர் கிணறும் கொண்ட மூன்றுபரப் புக்காணி உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: திருமதி இ. இராசதுரை, C/o சி. சுப்பிரமணியம் பழையவீதி, கோப்பாய் தெற்கு. கோப்பாய். சி-9833

---

சகல விதமான திருமணப் பட்டுப் பிடவைகளுக்கும், றெடிமேட் ஆடைகளுக்கும், நம்பிக்கையான ஸ்தாபனம் கணேசன் ஸ்ரோர்ஸ், இல 11, கஸ்தூரியார் லேன், (கன்னு திட்டிக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். ஏ-1904

---

நாஷனல் வீடியோ டெக் [300, 370, 7000, 2000, 7200] இற்குரிய IC கள், சகல மெக்கானிக்கல் உதிரிப்பாகங்கள், சகல அளவுள்ள ரெலிவிசன் ரியூப், ரியூனர், Fly Back என்பன விற்பனைக்குண்டு. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவைக்கருகாமை), யாழ்ப்பாணம். சி-9796]

---

28-07-87, செவ்வாய்க் கிழமை காலை 9மணிக்கு யாழ். கால்நடை வைத்தியர் காரியாலயத்தில் ஒருநாள் கோழிக் குஞ்சுகள்விநியோகிக்கப்படும். பெறவிரும்புவோர் அவ்வப் பகுதி கால்நடை வளர்ப்போர் சங்கக்கிளைகளிடமோ, யாழ். கால்நடை வளர்ப்போர் சங்க நிர்வாக உறுப்பினரிடமோ, யாழ் கால்நடை வளர்ப்போர் காரியாலயத்திலோ 20-7-87 க்குமுன்பு பணம் செலுத்தி பதிவுசெய்து கொள்ளவும். சி-9801

### தேவை

அனுபவம் உள்ள வானொலிப் பெட்டிகள் பழுது பார்க்கும் தொழில்நுட்ப வல்லுநர்கள் [Technicians] தேவை இவர்கள் காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரைக்குள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். "ரெலிக் கோணர்", நவீன சந்தை, சாவகச்சேரி. (சி—9765)

### கல்வி

இந்தியாவில் அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகளில் அனுமதி பெற விரும்பும் மாணவ / மாணவிகள் 18-ம் திகதிக்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமைஉண்டு. தகைமை G.C.E. [O/L], 1-7-87 அன்றுள்ள படி 20 வயதுக்குக் குறைவாக இருக்கவேண்டும். "ஹரிஹரன் என்ரபிறைஸ்', 337, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [சி-9824]

### FOR SALE

London Accountancy Books and Notes for Sale. Ruhaa Centre (Opposite Insurance Corporation Office) 615 B, Hospital Road, Jaffna. C-9827

## அறிவித்தல்

மன்னார் மாவட்ட நீதிமன்றம்

காலம் சென்ற எருக்கலம் பிட்டி சினனத்தம்பி கப்பலார் சாஹுல் ஹமீது என்பவரின் மரணசாதன மில்லாத மரணச்சொத்து விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 14/T/87

சாஹுல் ஹமீது ருக்குறுதீன், 4ம் வட்டாரம் எருக்கலம்பிட்டி,

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதுக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறை உள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு ஜூலை மாதம் 28ம் திகதி முற்பகல் 8-30மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1987ம் ஆண்டு ஜூன் மாதம் 26ந் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
**முத்தையா பத்மநாதன்**
பதிவாளர்

வரைவு:-
எம். சதக்கத்துல்லா B. A. (Cey)
மனுதாரின் சட்டத்தரணி.
[சி-9831]

## கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.

எமது சங்கத்தின் பின்வரும் பதவிக்கு கீழ்வரும் தகைமைகளை உடையஇலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் "பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்கிளிநொச்சி' என்ற விலாசத்திற்கு, தபால் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு 30-7-87ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

### தட்டெழுத்தாளர் (தமிழ் - ஆங்கிலம்)

சம்பள அளவுத்திட்டம்: 305-14
அடிப்படைச்சம்பளம்: 195-345
10x10 - 12.50x4

இத்துடன் சங்கம் வழங்கும் ஏனைய படிகளும்.

க. பொ. த. (சாதாரண தரத்தில்) சம்பந்தப்பட்ட மொழியினை உள்ளடக்கியதாக ஆறு (6) பாடங்களில் சித்தியும், தமிழ் தட்டெழுத்தாற்றல் நிமிடத்திற்கு 20 சொற்களும் ஆங்கிலம் தட்டெழுத்தாற்றல் நிமிடத்திற்கு 30 சொற்களும்.

மேற்படி பதவிகளில் ஐந்து (5) வரு அனுபவம்.

வயது: 22 - 35 வரை.

சான்றிதழ்களின் படப் பிரதிகள் இணைத்து அனுப்பவும்.

இங்ஙனம்,
இ. பசுபதிப்பிள்ளை
பொதுமுகாமையாளர்.
[ஏ 1915]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## விலை அதிகரிப்பு

(கொழும்பு)

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் தனது உற்பத்திப் பொருள்கள் அனைத்துக்கும் கணிசமான அளவு விலைஅதிகரிப்புச் செய்துள்ளது.

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பதவி வெற்றிடம்

1987 ஆகஸ்ட் 17ம் தேதி வரை பிரதான மாசல் பதவிக்கான விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்,

பதவி: பிரதான மாசல் (Chief Marshal)
சம்பள அளவுத் திட்டம்:
ரூபா: 2400-3x80-2640/2800/-6x80-3280/3440-9x80-4160/-
மாதமொன்றிற்கு (.........ரூபா 90/-)

(1) தகைமைகள்:
(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாகவும் உதவிப் பொலிசு அத்தியட்சகர் பதவிக்குக் குறையாத தரத்திலுள்ள அலுவலராகவோ இலங்கையின் ஏனைய ஆயுதப் படைச் சேவைகளில் அதற்குச் சமனான தரத்தைச் சேர்ந்த அலுவலராகவோ இருத்தல் வேண்டும்.
அல்லது
(ஆ) பல்கலைக்கழக பிரதிப் பிரதம மாசல் தரத்தில் ஐந்தாண்டுக்குக் குறையாத திருப்திகரமான சேவையைக் கொண்டுள்ள பிரதிப் பிரதம மாசல்

(2) வயது: நாற்பது ஆண்டுகளுக்குக் குறைந்திருத்தலாகாது.
(உள்நிலை விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது)

(3) உடலமைப்பு:
உயரம் 5' 5''
மார்பு 32'' (சுருங்கிய நிலையில்)

குறிப்பு: பல்கலைக்கழகத்திலும்/அல்லது தேசிய மட்டத்திலும் விளையாட்டு, சமூக நல நடவடிக்கைகளிலும், பொழுதுபோக்குத் திட்டங்களிலும்சுறுசுறுப்புடன் பங்குபற்றுவபர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தெரிவு: தெரிவு நேர்முகப் பரீட்சை மூலம்.

சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற கடித உறையை கீழ்க் கையொப்பம் இட்டுள்ளவருக்கு அனுப்பிப் பெறக்கூடிய விதிக்கப்பட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

அரசசேவை/அரச கூட்டுத்தாபனத்தின் / சபைகளிலுள்ள அலுவலரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் அவர்களின் நிறுவனத்தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். இத்தேவைக்கு இணங்கியொழுகாவிட்டால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [ஏ 1916]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொ. நடராஜா அவர்கள்**
S. L. A. S.
(ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி)

மலர்வு: 27-10-1924
உதிர்வு: 15-07-1985


நெஞ்சமெலாம்
நீ நிறைந்தாய்
வையத்தில் எமை
விளங்க வைத்த
சுடரே
வஞ்சம் நிறை உலகில்
திக்கற்றவர்களுக்குத்
தீப ஒளியானாய்.

எம்மையெல்லாம் துலங்க வைத்த உத்தமரே! அன்பெனும் கரத்தால் அரவணைத்த பெருந்தகையே. துன்பம் என்பது தெரியாமல் காத்த தீபச் சுடரே திடீரென நீர் எமைப் பிரிந்து இறைவனடி சேர்ந்த துயர் ஆண்டுகள் 2 நிறைந்தாலும் என்றென்றும் எம்மை விட்டகலாது உமது நினைவு; உமது பிரிவால் நிதமும் வாடும்:-

தந்தை, மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரன்மார்.

181, அரசடி வீதி,
நல்லூர்.
[ஏ-1919]

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இராசநாயகம் இரட்ணராஜா**

மலர்வு: 18-02-1948
உதிர்வு: 16-7-1986

அன்பாலும் நற்பண்பாலும் எல்லோர் இதயத்திலும் நிறைந்திருக்கும் ஒளிவிளக்கே! எம்மையெல்லாம் ஆறாத்துயரில் தவிக்கவிட்டு ஓராண்டு ஓடிமறைந்தாலும் உமது நினைவு என்றும் எங்கள் நெஞ்சை விட்டகலாது! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

இவரது ஆன்ம இளைப் பாற்றிற்காக பத்தாவத்தை புனித பிலப்பு னேரியார் ஆலயத்தில் 16-07-1987 மாலை 5-00 மணிக்கு திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
பெற்றோர்,
உடன்பிறப்புக்கள்,
மனைவி, பிள்ளைகள்.
[சி-9835]

---

### லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி

## அனுமதி – 1987

## நேர்முகப் பரீட்சை

மேற்படி கல்லூரியில் சேர விண்ணப்பித்த சகலரும் 27-7-87 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு சகல மூலப் பிரதிகளுடனும் கல்லூரிக்கு சமுகமளிக்கவும்.

127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவாளர்.
[சி-9836]

## VACANCY

Wanted for an industrial establishment in Jaffna an experienced STORE KEEPER.
Age limit from 35 years to 45 years.
Please call at the office for an interview on 20-07-1987, with testimonials.
Canvassing in any form will be a disqualification.

**THE PENINSULA GROUP,**
Mahendra Glass Works Limited.,
No. 163, Kandy Road, Ariyalai,
Jaffna. [C-9828]




இன்றைய
№ 1
நீலசோப்
தேசிக்காய் வாசனையுடன்
LANKA
எம்டீ நீல சோப்
எம்டீ என்ரபிறைஸஸ், அச்சுவேலி

# வளைகுடாவில் தாக்குதல் தொடரின் ஈரான் யுத்தக்கப்பல்கள் தகர்க்கப்படும்

## அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூலை. 14

**வளைகுடாவில் செல்லும் அமெரிக்க கப்பல்கள் தாககப்படும் பட்சத்தில் ஈரானின் 'சில்க்வேர்ம்' ஏவுகணை பொருத்தப்பட்ட கப்பல்கள் ஹோர்மோஸ் நீரிணையில் தகர்க்கப்படுமென அமெரிக்கா கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. எனினும் இதனைத் தான் பொருட்படுத்தப்போவதில்லையென்றும் ஈரான் அறிவித்துள்ளது.**

வளைகுடாவில் ஈரான்-ஈராக் டங்களாக இப்பகுதியில் செல் போரையடுத்து எழுந்த யுத்த லும் கப்பல்களை ஈரான் தாக்கி சூழ்நிலையில் கடந்த சில வரு வருவது அதிகரித்துள்ளது.

இதனை எதிர்த்த அமெரிக்காவின் முடிவுக்கு பதிலடியாக ஈரான் ,வ் எதிர்ப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தியது.

அமெரிக்க கொடியுடன் சென்ற குவைத் கப்பல் உட்பட பலநாடுகளின் கப்பல்கள் தாக்கப்ப டு வந்ததைக் கண்டித்த அமெரிக்கா இவற்றுக்குப் காப்பாக தனது யுத்தக்கப் ப'துபல்களை அனுப்பிவைத்தது எனினும் எதுவி ஃபலனுமளிக்க வில்லை. இவ்வேளையில் அமெரிக்க கப்பலும் தாக்கப்பட்டுள்ளமையும் மற்றும் பல கப்பல்கள் தாக்கப்பட்டமையும் அதன் ஆத்திரத்தை பெரிதும் கிளறியுள்ளது.

இதனையடுத்தே ஹோர்மோஸ் நீரிணையில் ஈரானிய யுத்தக் கப்பல்களில் பொருத்தப்பட்டுள்ள சீனத்தயாரிப்பான 'சில்க்வேர்ம்' ஏவுகணைகளை தகர்க்கப்போவதாகஅமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. எனினும் ஈரான் தனது அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கையை வளைகுடாவில் தொடருமெனவும் அறிவித்துள்ளது. (சி)

## அலைகடலில் அலைக்கழியும் அகதிகள் கப்பல்!

### அரசியல் தஞ்சம் கோரும் பலநாட்டு மக்கள்

### நோர்வேயில்

நோர்வேயில் தரையிறங்க அனுமதிக்கப்படாத பலநாட்டு அகதிகளையும் கொண்ட கப்பலொன்று பலத்த பாதுகாப்புடன் அங்கு நிற்பது தற்போது அந்நாட்டரசுக்கு பெரும் நெருக்கடியை கொடுத்து வருகிறது. பத்திரிகை விமர்சனமும் பலத்த கண்டனமாகவேயுள்ளது. தஞ்சப்பொட்டியில் கப்பலினுள் கோஷ்டி மோதலும் அதிகரித்துள்ளது

இலங்கைத் தமிழர்கள், ஈரானியர் உட்பட பல நாடுகளைச் சேர்ந்த 380 க்கும் மேற்பட்ட அகதிகள் கப்பலிலுள்ளனர். இதன் போதே கப்பல் சிற்றுண்டிச்சாலையில் தமிழர்களுக்கும் ஈரானியர்களுக்குமிடையில் எழுந்த வேடிக்கைப் பேச்சு விபரீதமாக மாறியதின் விளைவு பெரும்கைகலப்பு - 7 ஈரானியர் 2 தமிழர்களுக்கு பலத்த காயம். பொலிசார் தலையீட்டினுல் நிலைமை மோசமடையவில்லை. எனினும் கப்பலில் பெரும் பதற்றம்.

அரசியல் தஞ்சம் கோரிய இவர்களை ஏற்றி வந்துள்ள இக்கப்பலின் வரலாறே ஒரு அவலக்கதை 1948-ல் கட்டப்பட்ட இக்கப்பல் ஸ்ரக்ஹோமில் நின்றபோது 'சுவிடிஸ் - அமெரிக்கா லைனர்' என்ற கொடி அப்போது பறந்தது. இது ஒரு பயணத்தின் போது மற்றொரு கப்பலுடன் மோதி இதிலிருந்த 30 பேரின் உயிரை பறித்தது பலருக்கு தெரியாது. ஆனால் இப்போது அது தெரிந்த விடயம்.

இந்தக்கப்பலை கடந்த வருடம் செஞ்சிலுவைச் சங்கம் விலைக்கு வாங்கி 'ஆடனே' துறைமுகத்தில் நங்கூரம் பாச்சி வைத்திருந்தது. மிதக்கும் ஹோட்டலாக பயன்படுத்தப்பட்டும் வந்தது. பின்னர் ஒரு சிலரின் கைமாறி தற்போது பலநாட்டு அகதிகளையும் சுமந்து கொண்டு சர்ச்சைக்குரியதாக நோர்வேயில் நிற்கிறது.

இவ்விடயம் நோர்வேயில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாவுகம் இதற்கு விரைவில் முடிவெடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் அந்நாட்டு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

### கனடாவில்

கனடாவில் அத்திலார்திக்கரையோர நொவெஸ் கோட்டியா துறைமுகம் நோக்கி சென்று கொண்டிருந்த மற்றொரு அகதிகள் படகு இடைநடுவில் திருப்பி வேறுபிரதேசம் நோக்கி செல்வதாக தகவல் கிடைத்துள்ளது. எனினும் இத்தகவல் ஊர்ஜிதப் படுத்தப்படவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறிய படகொன்றில் சென்ற 174 அகதிகளும் கனேடிய கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். தற்போது அவர்கள் நோவஸ்கோட்டியாதுறைமுக நகருக்கருகிலுள்ள இராணுவ முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விசாரணையும் நடைபெற்று வருகிறது. அனைவரும் இந்தியர் - பெரும்பாலானோர் சீக்கியர்.

இவர்களை இப்பகுதிக்கு சட்டவிரோதமான முறையில் ஏற்றிச் சென்ற மேற்படி 'எமிலி' எனும் படகின் கப்டன் ஒருவரும் [சுவீடன் நாட்டவர்] இங்கிலாந்தை சேர்ந்த மற்றொருவரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

இதேவேளை இப்பகுதி வந்து இடைநடுவில் திரும்பி வேறு பிரதேசம் செல்வதாகக் கூறப்படும் படகொன்றை பின்தொடர்ந்து கனேடிய கடற்படையினர் விரைந்துள்ளனராம். சர்வதேச கடல் எல்லையை படகு தாண்டமுன் பிடிப்பதே இவர்கள் நோக்கம்.

கடந்த வருடம் நியூபவுண்லாந்துகரையில் இரண்டு படகுகளில் தமிழகதிகள் சென்றடைந்ததும் அவர்கள் கனேடிய குடிவரவு சட்டவிதிகளுக்கமைய விசாரணை முடியும்வரை அங்கு தங்க அனுமதிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையே தற்போது அங்கு சென்றுள்ள இந்திய அகதிகள் விடயத்திலும் ஏற்படலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்விடயம் கனேடிய அரசுக்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### நட்புறவை மேம்படுத்த

## சோவியத் தூதுக்குழு இஸ்ரேல் விஜயம்

மாஸ்கோ ஜூலை. 14

சோவியத்- இஸ்ரேல் நட்புறவைப் புதுப்பிக்கும் நோக்கில் கடந்த 20 வருடங்களின் பின் முதல் முறையாக சோவியத் குழுவொன்று நேற்றுமுன்தினம் இஸ்ரேல் சென்றுள்ளது இரு தரப்பு உறவு குறித்தும் பேசசுக்கள் நடைபெறவுள்ளன.

1967க்கு முன் இரு தரப்பு உறவும் சுமுகமாகவே இருந்தது எனினும் அதன்பின் ஏற்பட்ட உலக நிலைமைகள் இவ்விரு நாடுகளிடையேயான உறவை விரிவுபடுத்தியதே தவிர நட்புறவை இறுக்கமடையச்செய்யவில்லை.

சோவியத் குழுவின் இவ் விஜயம் ஜெரூசலத்திலுள்ள ரஷ்யஆலயங்களினதும், ரஷ்ய மக்களினதும் நலன் பற்றி ஆராயப்படவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இக்குழுவினர் இஸ்ரேலில் சோவியத் நலன்காக்கும் பின்லாந்து தூதரகத்திலே தங்கியிருப்பார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பு உறவு குறித்தும் இஸ்ரேலிய பிரதமர் திரு. ஷமிர் நம்பிக்கை தெரிவிக்காத போதும் இருதரப்பு உறவும் சீரடையும் நிலையிலுள்ளதாக முன்னுள் பிரதமரும், இன்றைய வெளியுறவு அமைச்சருமான திரு. ஷிமொன் பெரஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி

**உலகச் செய்திகள்**

### இந்தியாவில் கல்வி பயிலும்

## ஆபிரிக்க கறுப்பின மாணவரிடையே 'எய்ட்ஸ்' நோய் பரிசோதனை

### பெரும் ஆர்ப்பாட்டம் வெடித்தது

புதுடில்லி. ஜூலை. 14

இந்தியாவில் கல்வி பயிலும் ஆபிரிக்க கறுப்பின மாணவர்களிடையே 'எயிட்ஸ்' நோய் பரிசோதனை நடாத்தப்பட்டதையடுத்து ஆபிரிக்கமாணவர் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் 70 மாணவர்கள் கைது செய்யப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப் பட்டனர்.

இந்தியாவின் பல்வேறுமாநிலங்களிலும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் விடுதிகளில்தங்கியிருந்து கல்விபயின்று வருகிறார்கள். வெளிநாட்டு நாகரிகத்தில் ஏற்பட்ட 'எயிட்ஸ்' நோய் பரவல் இந்தியாவை பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ளது.

இதனையடுத்து இங்கு ஆபிரிக்க மாணவரிடையே மேற்கொள்ளப்பட்ட 'எயிட்ஸ்' நோய் பரிசோதனை ஆபிரிகக மாணவரிடையே பெரும் கொந்தளிப்பு நிலையை உருவாக்கியுள்ளது. குறிப்பாக தமது கௌரவத்தை பாதித்துள்ளதாக கூறி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில்இறங்கினர். கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பும் ஆபிரிக்க மாணவரிடையே இவ்வாறன பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதும் எதிர்ப்புகள் கிளம்பியதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### இஸ்ரேல் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்தது;

### சிறிலங்கா அரசு தமிழர்களை ஆள திட்டம்

## ஈழவர் முன்னணி பண்ணாகம் கருத்தரங்கில் 'பரா' விளக்கம்

(பண்டத்தரிப்பு நிருபர்)

"இஸ்ரேல் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்து அங்குள்ள மக்களை துன்புறுத்தி அகதிகள் முகாம்களில் சிறு சிறு குழுக்களாக தங்கவைத்து கடந்த 30 வருடகாலமாக ஆளுவதைப் போல சிறிலங்கா அரசும் எமது தமிழ் மக்களை ஆளுவதற்கு திட்டமிட்டு செயல்ப்பட்டு வருகின்றது. தமிழ்ப் பிரதேசங்களை இராணுவத் துன்புறுத்தல்கள் மூலம் சூனியப்பிரதேசங்களாகமாற்றி தனது நிலையை ஸ்திரப்படுத்தும் ஒரு தந்திர திட்டத்தையே அரசு தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றது."

இவ்வாறு ஈழவர் முன்னணி நேற்று ஞாயிறு பிற்பகல் பண்ணாகத்தில் நடாத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய ஈழப் புரட்சி அமைப்பின் வடமாகாண அமைப்பாளர் திரு. பரராஜசிங்கம் பரா) குறிப்பிட்டார்

"ஈழப் போராட்டத்தின் இன்றைய அரசியல் நிலை, ஈழப்போராட்டத்தில் ஈழவர் பங்களிப்பும் வெகுஜன அமைப்புகளின் செயற்பாடும்" என்ற பொருள் பற்றி நடாத்தப்பட்ட இக் கருத்தரங்கிற்கு திரு. மகாதேவா தலைமை வகித்தார்.

பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் திரு. பரராஜசிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

### மக்கள் மத்தியில் அதீத கற்பனை

'நாளை என்ன நடக்கும்? அரசின் மூன்றும் கட்ட இராணுவ நடவடிக்கை நடைபெறுமா? இந்தியா படை எடுக்குமா? சீனு உதவிக்கு வருமா? இந்திய அரசின் நிலைப்பாடு என்ன? போன்ற பல கேள்விகள் இன்று எம் மக்கள் மத்தியில் இடம்பெறுகின்றன. பல்வேறு அதீத கற்பனைகள் மக்கள் மத்தியில் நிலவி வருகின்ற இக்கால கட்டத்தில் எமது ஈழப்புரட்சி அமைப்பு எமது போராட்டத்தை முன்னெடுத்து செல்வதற்கான பொருளாதார, அரசியல், இராணுவ துறைகளில் தனது கவனத்தை செலுத்தி வருகின்றது. கடந்த நான்கு வருடகாலமாக அரசு தனதுநிலையை ஸ்திரப்படுத்துவதற்கு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் வெற்றி பெறவில்லை. கிழக்கு மாகாணத்தில் 86 இராணுவ முகாம்களை நிறுவியுள்ள போதிலும் அங்கு போராளிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வட பகுதியிலும் அரசு எதிர்பார்க்காத நிலையே நிலவி வருகின்றது.

### உலக மட்டத்தில் ஈழத்தமிழர்

இன்று ஈழத்தமிழர் பிரச்னை சர்வதேசரீதியில் உயர் மட்டங்களில் விவாதிக்கப்பட்டு வரும் அரசியல் பிரச்னைகளில் ஒன்ருக மாறியுள்ளது. இந்திய அரசு இன்று ஒரு இறுக்கமான

(6ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

மற்றவர்களுடைய ரகசியங்களைத் தெரிந்துகொள்வதில் செவிடனுகவும், பிறர் மனைவியை நோக்கும்போது குருடனுகவும், கோள் சொல்லும் விடயத்தில் ஊமையாகவும் இருப்பவன் அறத்தின் உருவமாய்த் திகழ்கிறுன்.

—நாலடியார்

# நமது நோக்கு

## பல்கலைக்கழகங்களும் மாணவர் இயக்கங்களும்

இளமை, வாலிபம் ஏறிடும் வயோதிபம் கண்டு நீண்ட வாழ்வு வாழும் பல மக்கள் தங்கள் சின்னக் கண்களால் கண்ட மாற்றங்கள் அனந்தம்!

உலகரீதியில் இதற்கொரு நல்ல சான்று உளது. அண்மையில் தமது பிறப்பிடமாகிய போலந்துக்கு மூன்ருவது விஜயத்தை முடித்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், வத்திக்கானிலும், போலந்திலும் ஏற்பட்டிருக்கும் அதிசய மாற்றங்களைப் புலப்படுத்துகிறுர்.

இன்றைய பாப்பரசர் போலந்தில் அவதரித்த மானிட தெய்வமென்பதே மரபு மாற்றத்தின் பெருஞ் சின்னம். அதனைவிட போலந்தில் ஏற்பட்ட சுதந்திர இயக்கமென்று கொள்ளப்படும் சொலிடாறிற்றி இயக்கத்துக்கு பாப்பரசர் ஆதரவளித்தமை, போலந்தின் ஆட்சியாளருக்கு ஆத்திரம் ஊட்டியிருந்தது; இருப்பினும் தாய் நாட்டின் பெருமகன் இன்று கத்தோலிக்க உலகின் தலைவரென்பதால் போலந்தின் கம்மியூனிஸ்ட் ஆட்சியாளர் அவருக்கு அதிக ஆதரவளிக்காவிட்டாலும், உபசாரம் செய்ய வேண்டியிருந்தது.

ஆட்சித்தலைவரும்பாப்பரசரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கவில்லை. உபசரிக்கும்பொறுப்புடைய தலைவர் கசப்பான கருத்துக்களை வெளியிடவேண்டியிருந்தமையும் அவற்றை ஒரு சவாலாகக் கொண்டு தக்க விடையளித்த பாப்பரசர் தமது அதிருப்தியை பண்புடன் வெளிப்படுத்தியமையும் ஒருமித்த சமுதாயம் இன்றைய உலகில் அரிதினும் அரிது என்பதை உணர்த்துகிறது.

எங்கும் எந்த நிலையிலும் இன்று இருவேறு உலகம் காணப்படுவது கண்கூடு; ஒரு நாட்டிலேயே, ஒரு சமூகத்திலேயே இந்தப்பிரிவினை தோற்றமளிக்கிறது

முரண்பட்ட நிலையில் அசம்பாவிதங்கள் தலைதூக்குவதும் அடக்கு முறைகள் கையாளப்படுவதும் போலந்தில் காணப்பட்டது. சொலிடாறிற்றி அவற்றை எதிர்த்து ஒருவித வெற்றி கண்டதும், அதேசமயம் அந்த வெற்றிக்கு ஆட்சி அடிப்படையில் எவ்வித தூபமும் இடப்படாதென்பது நிலைநாட்டப்பட்டிருக்கிறது.

இந்த அடக்குமுறையை கத்தோலிக்க பேராட்சி எதிர்ப்பது இன்றையகாலத்தின் கோலமெனலாம். அதற்குரிய தத்துவம்என்ன?

மக்களின்மேம்பாட்டுக்கே அரசியல்மட்டுமல்ல மதமும் தோன்றியது. எங்குமக்கள் இம்சைக்கும் அநீதிக்கும் உள்படுத்தப்படுகிறுர்களோ அதனை எதிர்க்கும் உரிமை, குழந்தைதொடக்கம் கிழவன் வரைக்கும், எவ்வித இனமத பேதமுமின்றி உண்டு. இது இக்காலச்சித்தாந்தம்.

அந்த உரிமை எவ்வகையில் செயற்படுகின்றதென்பதில் தான் கருத்துவேறுபாடு உண்டு.

எங்கள்நாட்டின்பல்கலைக்கழகங்கள் வருடத்தில் பெரும்பகுதி மூடப்படுகின்றன. அடக்கமுடியாதென்ற குளப்பம் காணப்பட்டதும் பொலிஸ் வளாகங்களில் நடமாடுவதும், அதற்கப்பால் மாணவர்கள் வெளியேற வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிப்பதும் சாதாரண நிகழ்ச்சிகளாய் விட்டன.

இன்றையமாணவர் எந்த நிலையில் மாணவர்? அந்த நிலைமாறி கிளர்ச்சிக்காரர்களாக மாறுவது எப்போது?

இவ்விரு அடிப்படைக் கேள்விகளுக்கு விடைகாண முடியாத நிர்வாகம் பல்கலைக்கழகங்களில் நடைபெறுவது ஆட்சிக்கும் நாட்டுக்கும் இரண்டாவது பெருந் தலைவலியாகின்றது.

தலைவலி என்பது ஒரு உபசாரவார்த்தை; தீராத புற்றுநோயாவென்று சந்தேகம் கொள்வது நியாயமாகும்.

தமிழர் பிரச்னையே முதலாவதாகக் கருதுகிறேம். அதிலும் இளைஞர் பிரச்னை முதலிடம் வகிக்கிறது இந்த இளைஞர் எவ்வாறு ‘பயங்கரவாதிகளா’க உருவெடுத்தனர்? இதனை ஆராய்ந்து தக்கமுடிவுகாண்பது முடியாதகாரியமா? இளைஞர் தீவிரவாதத்தை ஒழித்துக்கட்டுவதே ஒரே ஒரு வழியென்றால், பல்கலைக்கழகங்களை மூடிவிடுவது இரண்டாவது தலைவலிக்கு உகந்த மாத்திரையாகும்.

பல்கலைக்கழக மாணவர் விவகாரங்களில் இளைஞரை பிரிவினைப் படுத்தி — மாணவர், மாணவபதர் என்று வடிகட்டிவிடுதல் ஆட்சியை ஆதரிக்கும் அடிவருடிகள், ஆட்சியை எதிர்க்கும் முற்போக்கு சக்திகள் என்ற பரவலான உண்மைக் கருத்தை ஒட்டி நிற்கும்.

இன்று நியமனம் பெற்ற தேசிய கமிஷன் மாணவர் இயக்கத்துக்கு தக்கபொறுப்பை அளிக்கவேண்டும். அதன் தலைமைக்கு பொறுப்புடைய சுதந்திர திறமைசாலிகளுக்கு இடமளிப்பதால் பிரச்னைதீர வழி உண்டு.

உலக அரசியல் — அவதானி

# வாஷிங்டனில் கொழும்பு கிழிபட்டது

இன்று இலங்கையில் நிலவும் நெருக்கடி பற்றி அமெரிக்க மக்களுக்கு விளக்க ஏற்பாடான கருத்தரங்கு வாஷிங்டனில் நடைபெற்றது. மனித உரிமை இயக்கத் தலைவர்கள், சர்வதேச மன்னிப்புச்சபை பிரதிநிதிகள் போன்ற பல சட்டப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அமெரிக்க காங்கிரஸ் பிரமுகர் திரு மேர்வின் எம். டிமலி கருத்தரங்கை ஆரம்பித்துவைத்தபோதுஇலங்கைச் சம்பவங்கள் பற்றி சரியான தகவல்கள் கிடைப்பதில்லை,இக் கூட்டத்தில் பெரியோர் சிலர் அந் நாட்டில் நடப்பதை நேரில் அறிந்தவர்களென்பதால் இக் குறையை நிறைவு செய்வார்கள் என்று நம்பிக்கைதெரிவித்தார்.

### திருமதி கெரன்பார்க்கர்

ஐ. நா. சபையில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமை தலைவர். தமது பேச்சில் “பாகிஸ்தான் எவ்வித ஒளிப்பு மறைப்பின்றி சிங்கள ராணுவத்துக்குப் பயிற்சி அளிக்கின்றது. ஜெயவர்த்தன அரசுக்கு இன்றைய போரில் பெருமளவிற்கு உதவுகிறது. பாகிஸ்தானுக்கு உதவி அளிக்கும் அமெரிக்கா இதுபற்றி பாகிஸ்தானைக் கட்டுப் படுத்த வேண்டும்” என்று வலியுறுத்தினுர்.

இலங்கை தமிழரின் உரிமைகள் எவ்வாறு பறிக்கப்படுகின்றன? அவர்களின் இன்றைய இன்னல்கள் எத்தன்மையானவை? இவை பற்றி தாமொருசிங்களஇரத்தவரராயிருந்தபோதும், நடுநிலைமையிலிருந்து விளக்கவேண்டுமென்றுர் டாக்டர் செனிவரத்ன.

இலங்கை அரசின் தடுப்புக் காவலிலிருந்த 500 தமிழ் இளைஞர் காணமற்போன மாயம் பற்றி ஆவணரீதியில் பிரஸ்தாபித்த டாக்டர் செனிவரத்ன, “நான் சிங்கள இனத்தைசேர்ந்தவன். சிங்கள, தமிழ் மக்கள் கொல்லப்படுவதை நான் கண்டிக்கின்றேன். தமிழரே இதில் கூடிய தொகையாகையால் அதுபற்றி நான் விசேடமாக வாதாடத் தயாராக மாட்டேன்

‘ஜனநாயக ஆட்சி வேரூன்றியிருந்த இலங்கையில் ஜனுதிபதி ஜயவர்த்தன அதனை மாற்றி சர்வாதிகார அமைப்புக்கு வழிவகுத்துவருகிறுர். அரசபயங்கரவாதம் இலங்கையில் அதிகரித்துவருகிறது ராணுவ ஜீப் ஒன்றை தமிழ் தீவிரவாதிகள் தாக்கினுல் அது அந்த இடத்தை விட்டு மறைந்துவிடும், ஆனுல் அரைமணி நேரத்தில், அரைமைல் சுற்றுடலில் வாழும் தமிழர் அனைவரும் கொல்லப்படுவார்கள்” என்கிறுர் டாக்டர் செனிவரத்ன.

தமிழர் பிரச்னையை அடிப்படையாகக் கொண்டுமக்கள் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இருஇனத்தவரும் அரசைத்தட்டிக் கேட்கும் உரிமையை இழந்திருகின்றனர். பாராளுமன்றத்தின் இறைமையை ஜனுதிபதி அபகரித்துள்ளார். மார்க்கோஸ் பாணியில் பொதுஜனவாக்கெடுப்பு நடத்தியிருக்கிறுர். இலங்கை அரசின் குண்டுகள் இலங்கை மக்கள்மேல் வீசப்படுகின்றன.

அமெரிக்க பாராளுமன்றத்தினரும், அமெரிக்க பொதுமக்களும் நாடு தலைகீழாகக் கவிழமுன்னர் தக்க நடவடிக்கை எடுக்க உதவ வேண்டுமென்று கேட்டிருக்கிறுர் டாக்டர் செனிவரத்ன.

“திருமதி பார்க்கர் தங்கள் மக்களுடன் போராடும் இலங்கை அரசு, சர்வதேச உதவியைத் தடுப்பதுடன், தானே யாழ் மக்களை முற்றுகையிட்டது அண்டைநாடு போன்ற இந்தியாவோ அல்லது செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச நிறுவனங்களோ தாங்கொணுத் துயரில் வாழும் தமிழ் மக்களுக்கு உதவ இலங்கை அரசின் அனுமதி தேவையில்லை” என்றுர்.

“தமிழ் மக்களின் அவலநிலைக்கு அத்தாட்சி வேண்டுமானுல் தமிழர்படும் அட்டூழியத்தைக் கண்ட பிரிட்டிஷ் கூலிப்படையினர் சகிக்க முடியாத நிலையில் வெளியேறி விட்டனர்” என்றுர் சர்வதேச மன்னிப்புச்சபை பிரதிநிதி திருமதி ஜோன்ஸ் பேசுகையில், “சித்திரவதைக்கெதிராக இலங்கை அரசு சட்டம் இயற்றியிருந்த போதும் தமிழ்ப் பிரதேசங்களில் கைதுசெய்யப்படும் மக்களுக்கு எதிராக அதிகம் கொடுமையான சித்திரவதை நடாத்தி வருகிறதென்று குற்றம் சாட்டினுர். நீதிமன்ற உத்தரவின்றி மக்கள் மரணதண்டனைக்குள்ளாவதும் தடுப்புக்காவலில் இருக்கும்போதே பிரேதங்கள் எரிக்சப்படுவதுபற்றியும் தங்கள் நிறுவனத்துக்கு முறைப்பாடு கிடைத்திருக்கின்றது” என்று சொன்னுர்.

திரு. விஜயன் ஆனந்தன் 27 வருடம் இலங்கை வெளிநாட்டுச் சேவையில் பணிபுரிந்தவர். தமிழர் பிரச்னை காரணமாக பதவியை ராஜினுமாச் செய்தவர்; அவருடைய பேச்சில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தமிழ் மக்கள் ஆற்றிய பணியை விளக்கி ஒன்றுபட்ட இலங்கைக்கு தமிழ்த் தலைவர்களே வித்திட்டவரென்றும், இன்று சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கெதிரான அரசியல் சட்டங்களை இயற்றி அந்த ஒருமைப்பாட்டைக் குலைத்து வருகின்றனரென்றும் கூறினுர். தமிழ்த் தீவிரவாதிகள் சிலர் பயங்கரவாதத்தில் ஈடுபட்டிருந்த போதும் அது அரசின் கொடுமைகளுக்கு பழிவாங்கும் செயலாகவே காணப்படுவதாகச் சொன்னுர்.

### இன்னெரு சங்கதி

வாஷிங்டனில் நடைபெறும் இன்னெரு நாடகம் ஈரான் கொன்ட்ரா விவகாரத்தில் இன்று சூத்திரதாரியாகக் காணப்படும் ஒலிவர் நோர்த் எவ்வாறு ஜனுதிபதி றீகனை இந்த ஒழுங்கினத்தில் இடம் பெறுகிறுரென்று விளக்க அழைக்கப்பட்டிருக்கிறுர்.

இதுவரை அளித்தசாட்சியத்தில் வாழைப்பழம் தோடம் பழம் ஏராளமாகக் காணப்பட்டன.

இஸ்ரேல் என்றுல் வாழைப்பழம் அமெரிக்கா என்றுல் தோடம்பழம் என்ற இரகசிய ‘கோட்’ சொற்களைபயன்படுத்தியதை வெளியிட்டிருக்கிறுர்

விசாரணையின் பெறுபேறு என்னவானுலும்,இக்கனிகளின் சுவை காணப்படாதென்பது நிச்சயம்.

### மாஸ்கோ

இந்தியா தனித்துநிற்கின்றதென்று இலங்கை குந்திக் கொண்டழுகிறது. ஆனுல் மாஸ்கோவில் நடைபெறும் ஒருவருட இந்தியக் கலைவிழா உலகின் ஒரு கணிசமானபகுதி இந்தியாவுக்கு உறுதியான ஆதரவளிப்பதைக் குறிக்கின்றது.

கர்நாடக சங்கீத விற்பனர் எம். எஸ் சுப்புலட்சுமிபாடிய சிவஸ்துதியுடன் வரலாற்று மகிமைபெற்ற கிறம்லென் நகரில் ஆரம்பமான விழாவில் ரஷ்ய தலைவர் கொர்பச்சேவ் பகவத்கீதையிலிருந்துஇந்தோ-சோவியத் நட்புக்குப் பொருத்தமான தத்துவங்களை விளக்கினுர்.

இன்று மாஸ்கோவில் நடைபெறும் இந்திய விழாவும், வருகிற நவம்பரில் இந்தியாவில் நடைபெறும் சோவியத் விழாவும் சாதாரணவைபவங்கள்அல்ல; கிறம்லின் இதுகானும் இவ்வித விழாவிற்கு அனுமதி வழங்கவில்லை. இந்தியாவின் 40வது சுதந்திரதினத்தையும் சோவியத் ரஷ்யாவின் 70 வது புரட்சித் தினத்தையும் குறிப்பிடும் இவ்விருவைபவங்களும் இருநாடுகளின் மக்கள் இதயபூர்வமாக ஒற்றுமைப்படுவதையும் அந்தஒற்றுமை இலகுவில் தகர்க்கப்படாத விருட்சமாவதையும் காட்டுகிறது என்று பெருமிதம்கொண்டார் கொர்பச்சேவ்.

வலி வடக்கில்

## 15 000 குடும்பங்களுக்கு அரச நிவாரண உதவி

(மாவிட்டபுரம் நிருபர்)

வலி வடக்குப் பகுதியைச் சேர்ந்த 15 ஆயிரம் குடும்பங்களுக்கு அரச நிவாரண உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

வலி வடக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மேற்படி குடும்பங்களுக்கு உடனடியாக இந்நிவாரணத்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரி

[5ம் பக்கம் பார்க்க]

தென்பகுதியில்

## தமிழ்மொழிக்கான அந்தஸ்து குறைந்துவருகிறது!

[கொழும்பு]

தென்பகுதியில் அரசாங்க காரியாலயங்களிலும் பொது இடங்களிலும் தமிழ்மொழிக்கு அளிக்கப்படும் அந்தஸ்து படிப்படியாக குறைக்கப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது. இதனுல் இப்பகுதிகளில் தமிழர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகிறுர்கள்.

மேற்படி இடங்களிலுள்ள பெயர்ப்பலகைகள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மாத்திரமே இடம்பெற்றுள்ளன. தமிழ்மொழி இடம் பெற்ற பெயர்ப்பலகைகள் திடீர் திடீரென காணுமல் போய்விடுகின்றனவாம்.

இதேபோன்றே இ.போ.ச. பஸ் பெயர் பலகைகளிலும் தமிழ் மொழி அகற்றப்பட்டு சிங்களமும் ஆங்கிலமும் மாத்திரமே இடம்பெற்றுள்ளன. இந்தநடவடிக்கை இப்பகுதிகளில்தொடர்ந்துஇடம்பெற்று வருவதாகவும் தெரியவந்துள்ளது. [சி]

## வலிவடக்கில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படுகிறது.

ஏற்கனவே ஒருவார விசேட நிவாரணத்தைப் பெற்றுக் கொண்ட குடும்பங்களுக்கு இந்நிவாரணம் வழங்கப்பட உள்ளதாகவும், இது 400 ரூபாவுக்கு உட்பட்ட பெறுமதியுடைய நிவாரண உதவி எனவும் கூறப்படுகிறது.

ஓரிரு நாட்களில் இந்நிவாரணம கிடைக்குமென வலி. வடக்கு பிரஜைகள் குழு ஒன்றிய செயலாளர் திரு. எஸ். சிவமகாராசா தெரிவித்தார்.

---

## 95-வது நாள் நினைவஞ்சலி



**செல்வி பவானி அருணாசலம்**

[உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி]

மலர்வு: 10-01-1969
உதிர்வு: 12-04-1987

அமைதியாய்த் துயின்ற அன்புச் செல்வமே!
அன்பான உம் முகம் அகல்வதற்கில்லை.
நீர் அகால மரணம் அடைந்து இன்று 95 நாட்கள் ஆயினும் உம்' நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது. உம் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உம் அன்பு நீங்காத
நா. அருணாசலம்,
குடும்பத்தினர்.
(கிறசர் உரிமையாளர்)

வல்வெட்டி. (சி-9843)

---

## மில்க்வைற்

**அபிமானிகள்!**
**ஆதரவாளர்கள்!**

எங்கள் பணிவான

**அறிவிப்பு**

இலக்கியம் இன்றேல்
இலக்கணம் இல்லை.
எள் இன்றேல்
எண்ணெய் இல்லை
மூலப்பொருள் இன்றேல்
உற்பத்தி இல்லை.
தேங்காய் எண்ணெய்
இன்றேல்

**மில்க்வைற்**
**சவர்க்காரம் இல்லை.**

அன்பர்களே!
தேங்காய் எண்ணெய்
மீண்டும் விலை
உயர்ந்து விட்டது.
நாங்கள் தயங்கித்தயங்கி
உற்பத்திகளுக்கு
விலையை சிறிது
உயர்த்தியுள்ளோம்.
மனங்கொள்ளாது
மன்னிக்கவும்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

[ஏ 1922]

---

மானிப்பாயைப்
பிறப்பிடமாகக் கொண்டு
மடைனர். உயிலங்குளத்தில்
தொழில்புரிந்து
கரணவாய் தெற்கில்
வாழ்ந்து
அமரத்துவமெய்திய

**சின்னத்தம்பி இளையராசா**

அவர்களின்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணகம்: 21-12-1933
விண்ணகம்: 16-6-1987

16-07-87ல் 211, சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சியில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

அவர் மரணச் சடங்கில் கலந்து அனுதாபந் தெரிவித்த அனைவருக்கும் நன்றி கூறுகிறோம் அன்னார் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.

தகவல்:
க. செல்லத்துரை.
[சி-9844]

---

## கடைசிநேர வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

கல்வியங்காட்டிற்கும் நீர்வேலிக்கும் இடையில் நல்லையா சிறீதரன் 35, கொண்டலடி லேன் நல்லூர் என்ற குறிப்போடு எனது அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் தரவும். சன்மானம் தரப்படும். சி-9841

### தேவை

எமதுஸ்தாபனத்திற்கு சகல விதமான பையின்டிங் வேலைகளும் Binders Machine Minders உடன்தேவை. 22-07-87க்கு முன் அத்தாட்சிப் பத்திரங்களுடன் தொடர்புகொள்ளவும் மஹாத்மா அச்சகம், ஏழாலை மேற்கு, ஏழாலை.
சி-9839

### விற்பனைக்கு

பாவித்தவீட்டுத் தளபாடங்கள், கண்ணடி அலுமாரி, சோக்கேஸ், Floor Polisher, எலற்றிக் கேற்றல், Guitar [கிற்றார்], R. X 60 National கசற் றேடியோ, Formica சாப்பாட்டுமேசை Office மேசை, Meat Safe, மேசைகள், Vono Spring Beds மற்றும் பலஉடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சி-9837

---

## வல்வைச் சம்பவம்: காயமடைந்தோர்

யாழ்ப்பாணம், புதன்

வல்வெட்டித் துறையில் கடந்த ஞாயிறன்று இராணுவத்தினர் கோவிலை நோக்கி ஏவிய ஷெல்களினால் காயமடைந்தோரில் நேற்றும் ஏழு பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அனுமதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

அருளானந்தசாமி தங்கேஸ்வரி [வயது 13], அருளானந்தசாமி சதீஷ் [வயது 5], அருளானந்தசாமி சந்தோஷி[வயது3], மகேந்திரன் பரமேஸ்வரி [53 வயது], கந்தசாமி இராமச்சந்திர நாகு [45 வயது], செலலக்கண்டு [89 வயது], சிவகுமார் [13 வயது].

---

## கொடிகாமத்தில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், புதன்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், விடுதலைப் போராளிகளையும் அங்கீகரிக்கக கோரி கொடிகாமத்தில் உண்ணாவிரதம் அநுஷ்டிக்கப்பட்டது.

இந்த உண்ணாவிரதத்தில் முன்நூறுக்குமதிகமானோர் கலந்து கொண்டனர். இந்திய நிவாரண உதவிக்கு நன்றி தெரிவிக்கும் சுலோக அட்டைகளையும் உண்ணாவிரதிகள் வைத்திருந்தனர். (வா)

---

## அலஸ்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அலஸ் விசாரணைக் குழுவின் தலைவர் முன்னாள் உயர்நீதி மன்ற நீதிபதி திரு. அந்தோனி கிறிஸ்தோப்பர் அலஸ் இம்மாதம் 23ம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ். வரவிருக்கும் திரு. அலஸ் குழுவினர் 25ம் திகதி சனிக்கிழமைவரை தங்கியிருந்து சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 30ம் திகதி இரவு கோட்டை இராணுவத்தினரால் ஏவிவிடப்பட்ட ஷெல் யாழ். ஆஸ்பத்திரியில் விழுந்துவெடித்ததினால் ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவரும் 19ம் வார்ட்டிலிருந்த எட்டு நோயாளர்களும் கோரமாகக் கருகிமாண்டது தெரிந்ததே.

இம் மாதம் 23ம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவிருக்கும் அலஸ் ஆணைக்குழு முன் சம்பந்தப்பட்டவர்கள் சாட்சியமளிக்க விரும்பின் யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வா)

---

## ஓய்வூதியம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவது சம்பந்தமாக சாவகச்சேரியில் நேற்று யாழ். அரச அதிபரினால் கூட்டமொன்று கூட்டப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில் சாவகச்சேரி ப. நோ. கூ சங்கத் தலைவர் திரு. வயித்திலிங்கம், உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம் மற்றும் வடமராட்சிப்பகுதி ப. நோ கூ. சங்க தலைவர்கள் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள பருத்தித்துறை புலோலி,கட்டைவேலி-நெல்லியடி, உடுப்பிட்டி, ப நோ கூ சங்கங்களிலுள்ள நான்கு கிராமிய வங்கிகளில் தமது ஓய்வூதியத்தைப் பெற்று வந்த 000 ஓய்வூதியக்காரர்களுக்கு சாவகச்சேரி ப நோ. கூ சங்க கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் வழங்குவதற்கு ஏற்பாடு செயயப்பட்டுள்ளது.

யாழ் செயலகத்தில் இயங்கும் ஓய்வூதியக்கிளை இந்த ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியபணத்தை தனித்தனியே மேற்கூறப்பட்ட நான்கு கூ. சங்க கிராமிய வங்கிகளின் பேரில் இலங்கை வங்கி காசோலை மூலம் எழுதி வழங்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வா)

---

# 'பொடிபுத்தா'வைத் தேடி மகன் யாழ் வருகிறார்

[நமது நிருபர்]

யாழ்ப்பாணத்தில் இடைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல்செய்வதற்காக வந்து காணமற் போயுள்ள முன்னாள் நிக்கவரெட்டிய எம் பி. முதியான்சே தென்னக்கோனை (பொடி புத்தா) தேடி அவரது மகன் பண்டார தென்னககோன் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்.

திரு பண்டார தென்னக்கோன் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து புறப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

தமது தகப்பனாரின் நிலையை அறிவதற்காக நிக்கவரெட்டியாவைச் சேர்ந்த ஒரு தமிழரைத் தாங்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியதாகவும், தகப்பனர் சுகமாக இருப்பதுபற்றிய தகவல் கிடைத்ததாகவும் அவர் பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார்.

---

## இலங்கை அதிகாரிகள் விமான எதிர்ப்பு ஆயுதம்பெற எம்முடன் பேச்சு நடத்தவில்லை

— பாக். பிரதமர்

(டோக்கியோ)

இலங்கை அரசாங்க, அதிகாரிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் கொள்வனவு செய்வது தொடர்பாக பாகிஸ்தான் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தினர் என்ற செய்திகளை பாகிஸ்தான் பிரதமர் ஜுனேஜோ நிராகரித்துள்ளார்.

ஜப்பானுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு வந்துள்ள ஜனுப் ஜுனேஜோ, டோக்கியோவில் நேற்று பத்திரிகையாளரிடையே பேசுகையிலேயே இச்செய்தியை நிராகரித்துள்ளார்.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கென இந்திய விமானங்கள் நிவாரணப் பொருட்கள் போட்டது நாகரீக உலகில் இதற்கு முன்னர் கேள்விப்பட்டிராத ஒரு சம்பவம் என்று வர்ணித்த அவர் இந்நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னர் இலங்கை அரசிடம் இந்தியா அனுமதி பெற்றிருக்கவேண்டும் எனத்தெரிவித்தார். இதன் பின்னர் இலங்கை அதிகாரி விமான எதிர்ப்பு ஆயுதங்கள் கொள்வனவு செய்வதுதொடர்பாக பேச்சுவார்த்தைகளை தமது அரசுடன்நடத்தவில்லை. என்று தெரிவித்த பிரதமர், பாகிஸ்தானுக்கு தனது எல்லைகளுடன் போதியளவு பிரச்னை உள்ளன எனக் கூறினார்.

---

## 1000 தொன்

(1ம் பக்கத் தொடச்சி)

சென்னைத் துறைமுகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பொருள்களைச் சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதுவர் திரு. ஜெயசிங்காவும் மற்றும் அதிகாரிகளும் பார்வையிட்டனர்.

இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும், இலங்கைத் தூதரக அதிகாரி ஜனுப் எம். ஏ மஜீத்தும் சென்னைத் துறைமுகம் வந்த குழுவில் அடங்கியிருந்தனர்.

'எம். வி. நிக்கோரேட்' என்ற இந்தக் கப்பலில் ஆயிரம் தொன் நிவாரணப் பொருள்கள் ஏற்றி அனுப்பப் படவுள்ளதாக இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் கூறினர்.

---

## உடை சேகரிப்பு

யாழ்ப்பாணம், புதன்

வடமராட்சி, வலிகாமம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினல் பாதிக்கப்பட்டு நிர்கதியான அகதிகளுக்கு உடைமற்றும் பொருள்களை சேகரிக்கும் பணியில் யாழ். பல்கலைக்கழக புனர்வாழ்வு அமையம் ஈடுபட்டுள்ளது.

---

## சுட்டிபுரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சப்படுகிறது.

வடமராட்சியில் நேற்றுமுன் தினம் ராணுவத்தினரால் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டு மக்களை சுட்டிபுரம் அம்மன் ஆலயம் உட்பட பல கோயில்களில் தஞ்சமடைய உத்தரவு விடுக்கப்பட்டது தெரிந்ததே.

இதனையடுத்து சுமார் 2000 க்கும் மேற்பட்ட மக்கள் இவ்வாலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் மரங்களுக்குக் கீழேயே தங்கியிருந்தனா.

நேற்று மாலை 5மணியளவில் இவ்வாலயத்தை சுற்றிவட்டமிட்ட 'ஹெலி' ஒன்று திடீரென றொக்கட் மோட்டார் தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரியவருகிறது இத்திடீர் தாக்குதலையடுத்து நிலைகுலைந்த அகதிகள் தாறுமாறாக ஓடத்தொடங்கினர். [கு]

---

## சென்சேவியர்

[1ம் பக்கத் தெடர்ச்சி]

இச் ஷெல்தாக்குதல் சம்பவத்தால் சாந்தியோ சவரிமுத்து வயது45) பத்திமா லைலாவதி [வயது40], விஜயராணி[வயது 08] ஆகியோரே பலியானவர்களாவர்.

'வடமராட்சி பகுதியில் இராணுவத்தினர் கடந்த ஞாயிறுகாலை ஊரடங்கு உத்தரவைபிறப்பித்ததைத் தொடர்ந்து அல்வாயிலுள்ளதமது வீட்டிலிருந்துவெளியேறிய இவர்கள் திக்கத்திலுள்ள சென். சேவியர் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்தபோதுஆலயத்தில் ஷெல்விழுந்து வெடித்ததினல் இவர்கள் மூவரும்ஸ்தலத்திலேய பலியானர்கள் என்று இச்சம்பவம் குறித்து தெரிய வருகிறது.

மேலும் ஷெல் விழுந்ததினல் இக்குடும்பத்தில் காயமடைந்த புஸ்பராணி [வயது17],யோகேந்திரன் (வயது 14), தவகுமார் வயது 2), ஜெயகுமார் [வயது 10], ஆகியோர் யாழ் ஆஸ்பத்திரியிலும், மேரிரெஜினி சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். [கு]

---

## இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

த்து வைபதற்கு காங்கேசன் துறையில் களஞ்சியவசதி இல்லாதிருப்பதால் இனிமேல் வரவிருக்கும் இந்திய உணவு மற்றும் நிவாரணப்பொருள்களை எங்கே களஞ்சியப்படுத்துவது என்ற பிரச்னை எழுந்திருக்கிறதாம்

காங்கேசன்துறை துறைமுகத்திலுள்ள களஞ்சிய அறைகள் ஏற்கனவே நிறைந்து வழிவதாகவும், இப்போ அங்கு 1200 தொன் உணவுப் பொருள்கள் இருப்பதாகவும் பாதுகாப்புப்படையினர் அறிவித்திருப்பதாகத் தெரிகின்றது:

இதேசமயம் இலங்கை அரசு வடபகுதிக்கு அனுப்பியுள்ள உணவுப் பொருள்களை ஏற்றிய கப்பல்களும் காங்கேசன்துறையில் நிற்கின்றனவாம். இதனல் இனி இந்தியாவிலிருந்து வரும் உணவுப் பொருள்களை கொழும்புக்குக் கொண்டுவந்து களஞ்சியப்படுத்தினல் என்னவென்பதுபற்றி உயர்மட்டத்தில்ஆலோசிக்கப்பட்டுவருகின்றதாம்.

# 'இராணுவம் சென்றபின்னரே வடமராட்சி திரும்புவோம்'

## வயோதிபர், நோயாளிகள் வெளியேற்றம்

வடமராட்சியிலுள்ள 1,75,000 மக்களில், 1,50,000 மக்கள் கடந்த ஒருமாதகாலமாக வெளியேறியுள்ளனர். இவர்களில் ஒரு லட்சம் மக்கள் தென்மராட்சியில் தஞ்சமடைந்துள்ளனர். ஏனையோர் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதியிலுள்ள முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். பல குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சியிலுள்ள மக்களைக் கோயில்களில் தஞ்சமடையுமாறு படையினர் வனொலியில் அறிவித்ததைத் தொடர்ந்து அங்கு எஞ்சியிருந்த வயோதிபர்கள், நோயாளர்கள் யாபேருமே கோவில்களில் தஞ்சமடைந்திருந்தனர். அன்றைய தினம் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் நடைபெற்று சில கோவில்களில் தங்கியிருந்தவர்கள் பலியானதைத் தொடர்ந்து எவரும் வீடு திரும்பவில்லை. கோயில்களில் இருந்தபடியே நேராகத் தென்மராடசிக்கு வந்துவிட்டார்கள்:

### 53 வயோதிபர்கள்....

இமையாணனில் ஒரு கோயிலில் தங்கியிருந்த 53 வயோதிபர்கள் நேராகக் கால்நடையில் தென்மராட்சிக்கு வந்துவிட்டனர். இதேபோல் வேறு சிலர் அச்சுவேலிக்கு சென்றுவிட்டனர்.

தற்போது வடமராட்சி ஆள் அரவமற்ற கச்சதீவு போல் மாறிவிட்டதென நேற்றுவந்த வயோதிபர் ஒருவர் தெரிவித்தார். அவர் அரச உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்றவர். விஷயங்களை நன்கு அறிந்தவர்.

### வனுந்தரத்தில் தேர்தலா

மக்கள் இல்லாத ஒரு வனுந்தரப் பிரதேசத்தில் அரசு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தப் போகிறதா? தேர்தல் வைக்கப் போகுறதா? என்றும் கேள்வி எழுப்பினர்.

யுவதிகள் மத்தியில் பெரும் பீதி குடிகொண்டுள்ளது. கடந்தமாத ஆரம்பத்தில் சில பெண்களைச் சந்தித்தேன். அவர்கள் அச்சம் காரணமாக வெளியேறி வந்ததாகத் தெரிவித்தனர். இங்குள்ள ஒரு வீட்டில் தங்கியிருக்கின்றனர்.

அவர்களில் ஒரு பெண் தமது ஆறு வயது மகளுடன் வந்திருந்தார். கணவர் வெளிநாட்டில் வேலை.

### பெண்களைப் பெயர்சொல்லி அழைக்கிறார்கள்

அயல் கிராமங்களில் பலவீடுகளில் இனம் தெரியாதவர்கள் இரவில் வந்து பெண்களைப் பெயர்சொல்லி அழைக்கிறார்கள் அதனாலேயே இங்கு வந்துள்ளோம் என்றார்.

## வடமராட்சி அகதிகள் – 2

புலோலி பொலிஸ் நிலையத்திற்கு சென்று புகார் செய்வதற்கு அங்கு மக்கள் இல்லை. பாடசாலைகள் பல உண்டு. படிப்பதற்கு மாணவர்கள் இல்லை. வைத்தியசாலைகள் உண்டு சிகிச்சைபெற நோயாளிகள் இல்லை. சங்கக் கடைகள் உண்டு. சாமான்வாங்க பாவனையாளர்கள் இல்லை. அரசாங்க காரியாலயங்கள் உண்டு. பணியாற்ற ஊழியர்கள் இல்லை. இந்த நிலையில் தான் இன்று வடமராட்சி இருக்கின்றது.

### கா. யோகநாதன்

மீண்டும் அங்கு மக்கள் திரும்புவார்கள் என்பது சந்தேகம்தான். சந்தித்த அத்தனை அகதிகளும் படையினர் வாபஸ் பெற்றபின்தான் வடமராட்சிக்குத் திரும்புவோம் என்றனர் காரணம் அச்சம், பயம், பீதிதான்.

### கேள்வியின்றி சுட்டுத்தள்ளினால்....

குழந்தை, சிறுவ , வயோதிபர், பெண்கள் என்று பாராமல் அத்தனைபேரையும் ஏன்? எதற்கு? என்ற கேள்வியில்லாமல் சுட்டுத்தள்ளுவதனால் மக்கள் அங்கு செல்லமாட்டார்கள் என்று கொடிகாமம் ரயில் நிலையத்திலுள்ள அகதிகள் தெரிவித்தனர்.

இங்குள்ள பாடசாலையில் தஞ்சமடைந்த இருவர் வடமராட்சியிலுள்ள தங்கள் வீடுகளைப் பார்க்கச் சென்றபோது, மறைந்திருந்த படையினர் அவர்களைச் சுட்டுப் பலியாக்கியுள்ளனர். இந்த நிலையில் எவர்தான் திருப்பிச்செல்வார்கள்? என்று அவர்கள் கேட்டனர்.

### ரயில் நிலையந்தில் கார்ட் குடும்பம்

கொடிகாமம் ரயில் நிலையத்தில் ஒரு ரயில்வே கார்டின் குடும்பத்தினர் தஞ்சமடைந்துள்ளனர். இவர் காங்கேசன்துறையில் கடமையாற்றியவர். பெயர் வி. இராசரத்தினம்

தொடர்ச்சியான ஷெல் தாக்குதலைத் தாங்க முடியாமல் கால்நடையாகவே வந்து சேர்ந்துள்ளார்கள். இவருடன் அக்கம்பக்கத்தை சேர்ந்த சுமார் 9 இளம் பெண்களையும் பெற்றோர்கள் அனுப்பிவைத்துள்ளனர். அவர்களும் ரயில் நிலையத்தில் தங்கியுள்ளனர். அவர்களில் சிலர் மாணவிகள்

வடமராட்சி இராணுவ நடவடிக்கைக்குப் பின் பெண்கள் அவர்களுக்கு பெயர் எப்படி தெரியும்; என்றேன்.

பகலில் வீடுகளுக்கு வந்து பெயர்களைக் கேட்கிறார்கள். என்றார்.

அந்தப் பெண் நெல்லியடியைச் சேர்ந்தவர் நல்ல வசதியான குடும்பத்தில் உள்ளவர் அச்சம் காரணமாக அயல் வீட்டைச் சேர்ந்த மற்றொரு பெண்ணுடனும் குழந்குழந்தையுடனும் வந்திருநதார் இப்படிப் பல பெண்கள் ஆரம்பத்திலேயே அச்சம் காரணமாக வெளியேறிவிட்டனர்.

அண்மையில் ஒரு ஆசிரியையைச் சந்தித்தேன். இவர் யாழ்ப்பாணத்தில் வசிக்கிறார் பெற்றோர்கள் பருத்தித்துறையில். இருவாரங்களுக்குமுன் இவர் அங்கு பெற்றோரைப் பார்க்கச் சென்றார் சில இரவுகள் அங்கு தங்கினார்.

அயல் வீடுகளில் இரவில் இனந்தெரியாதவர்கள் வந்து கதவைத் தட்டுவதாக அவர் தெரிவித்தார். அரைகுறைத் தமிழில் பெயர் சொலலி கூப்பிடுவதாகவும் அவர் சொன்னார்.

உயர்கல்வி மாணவி ஒருவர் விடுமுறைக்கு வீடு வந்திருந்தார். வடமராட்சியில், பெற்றோர் வீட்டில் தங்கியிருந்த போது இரவு இனந்தெரியாத சிலர் வந்து பெயர் சொல்லிக் கூப்பிட்டிருக்கிறார்கள் பீதியடைந்த தந்தை அம்மாணவியை பின்பக்கத்தால், உறவினர் வீட்டிற்கு அனுப்பிவிட்டு, கதவைத் திறந்து அவர் வீட்டில் இல்லை என்று கூறிவிட்டார். வந்தவர்கள் திரும்பிவிட்டனர். மறுநாள் காலை அம்மாணவி மினி பஸ் ஒன்றில் நல்லூருக்கு வந்துவிட்டார். அந்த மாணவியை தெரிந்தவர் இந்த சம்பவத்தை தெரிவித்தார்.

இப்படி இரவு பகலாக தொல்லைகள், மிதாந்தரவுகள் தொடர்ச்சியாக இடம்பெறும் போது வல்லையைக்கடந்து எவரும் மீண்டும் வடமராட்சி செல்வார்களா? என்றும் அவர் கேட்டார்.

அமைதி நிலவினால் தாக்குதல் நின்றால், தீர்வு ஏற்பட்டால், அதன்பின்னர் தான் வெளியேறிய மக்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்புவது பற்றி சிந்திப்பார்கள், அதுவரை அவர்கள் அகதிகளாக அங்குமிங்குமாக அலைவதைத் தவிர வேறு வழியில்லை.

(தொடரும்)

### உபகாரப் பண்பாளர்



அன்பு மிகு வரதுங்கம் ஆசிரியர் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியையும், உயர்கல்வியையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரில் பயின்றார். இவர் தனது பள்ளிவாழ்க்கையிலேயே மிகவும் கண்ணியமாகவும் கடமையை ஒழுங்காக செய்யும் மாணவனாகவும் திகழ்ந்தார்.

ஆசிரியராகக்கடமையாற்றத் தொடங்கிய அமரர் சொந்த ஊரிலும் கொழும்பிலும் கடமையாற்றினார் அக்காலத்தில் இவரது திறமையைக் கண்டு கல்வி இலாகா தொண்டமானாறிலுள்ள மகாவித்தியாலய உப அதிபராக நியமித்தது.

தனது ஊர்ப் பிள்ளைகளுக்கு இலவசமாக ஆங்கில பாடம் சொல்லிக் கொடுத்து இளஞ் சந்ததியினரின் ஆதரவு நிறையப் பெற்றிருந்தார். இவரது ஆங்கில அறிவும் சொல்வன்மையும் மெய் சிலிர்க்கவைக்கும் நன்மையான ஊரிலோ, அல்லது நண்பர்களிடமோ ஏதாவது பிரச்னை என்று அவரை அணுகினால் அதற்கேற்ற முறையில் பிரச்னைகளை சுமுகமாக தீர்த்துவைத்துப் பிரச்னைகளை நுணுக்கமாக ஆராய்வதில் சட்ட வல்லுநர்களையே மிஞ்சிவிடுவார். சமயப்பணி, சமூகப்பணிகளையும் இவர் விட்டு வைக்கவில்லை. இறந்து ஒரு வருடமாகி விட்டபோதிலும் இவரது சேவைகளும் பண்புகளும் நாம் இவரை நினைக்கதூண்டுகின்றன.

— கார்த்திகேசு

### இல்லவிளையாட்டு

(கிளிநொச்சி நிருபர்)

உருத்திரபுரம் கொத்தணிப் பாடசாலைகளின் இல்ல விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று 15-ம் திகதி புதன்கிழமை இந்து மகாவித்தியாலய விளையாட்டரங்கில் கொத்தணி அதிபர் பொன் சபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கல்விப்பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் கலந்து கொள்கிறார்

### இஸ்ரேல்

(3ம் பக்கத் தொடர்ச்சி]

முடிவை எடுக்கும் நிலைக்கு வந்துள்ளது. தனது பிராந்தியப் பாதுகாப்பை முன்னிட்டு, தமிழ்நாட்டு மக்கள் எமது பிரச்னையில் தீவிர கவனம் செலுத்துவதினாலும் இந்தியா இலங்கை அரசுக்கு பல்வேறு நெருக்கடிகளைக் கொடுக்க ஆரம்பித்துள்ளது. இந்த நாட்டை இரண்டாகப் பிரிக்கப்படுவதையும் இந்தியா விரும்பவில்லை என்பதையும் கவனத்திற்கு எடுக்கவேண்டும் ஆனால் இந்திய அரசு ஒரு முடிவை எடுத்து அதை ஏற்றுக் கொள்ளுமாறு இலங்கை அரசை வற்புறுத்தக்கூடிய நிலையும் இருக்கிறது.

### மலையகத்தின முக்கியத்துவம்

"இன்று தேசிய வருமானத்தில் 70 வீதத்தை ஈட்டிக் கொடுக்கும் மலையகத் தமிழர் நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு மிகுந்த கஷ்ட நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். இன்று அவர்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி பறித்த உரிமைகளை மீண்டும் பெறக்கூடிய போராட்டங்களை நடாத்துமளவுக்கு இந்த விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. மலையக மக்கள் ஒரு நாளைக்கு வேலை நிறுத்தம் செய்தால் எட்டுக்கோடி ரூபாவுக்கு பொருளாதார நஷ்டம் ஏற்படும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. இந்நிலையில் எமது ஈழ விடுதலைப் போராட்டத்தில் அவர்களின் பங்களிப்பை தகுந்த முறையில் நாம் பயன்படுத்த வேண்டியுள்ளது. மலையகத்தில் இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டு பல தொல்லைகள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் அமைச்சர் தொண்டமான் போன்றவர்களினால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அங்குள்ள மக்கள் மத்தியில் போராட்ட உணர்வு தலைதூக்கியுள்ளது

ஈழப் போராட்டத்தை யார் மேற்கொண்டாலும் எமது ஈழப்புரட்சி அமைப்பு அதற்கு தமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வரும் எத்தனை இடர்கள் வரினும் எமது ஈழப் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்ல வேண்டும் கடந்த காலங்களில் தமிழ்த்தலைவர்களுக்கும்சிங்கள அரசியல் தலைவாகளுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் எதுவும் பலனளிக்காத நிலையில் இன்று ஈழப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதை தவிர எமக்கு வேறு வழியில்லை.

ஈழவர் முன்னணி பொதுச் செயலாளர் திரு. செ. எட்வேர்ட் உரையாற்றுகையில், "ஈழப்போராட்டத்தை தொடர்ந்து நடாத்துவதற்கு ஏற்ற பொருளாதார வளத்தையும், அரசியல், ராணுவத் துறைகளையும் மேம்படுத்துவதற்கு மக்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பம் மிகவும் அவசியம் எனக்கருதியே ஈழவர் முன்னணி தனது செயல் திட்டங்களை வகுத்து வந்துள்ளது என்றார்.

ஈழவர் முன்னணியின் அமைப்பாளர் திரு. செல்வநாயகம் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். இறுதியில் கருத்தரங்கில் கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு திரு. பரா பதிலளித்தார்.

(மா)

### முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி நாகரத்தினம் சிவராஜா

மலர்வு: 24-07-1922
உதிர்வு: 15-07-1986

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் பாசத்தின் உறைவிடமாய் எம்மையெல்லாம் வழிநடத்திய அன்புத் தெய்வமே! எங்கள்அனைவரையும் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றீர்கள். நாட்கள் 365 தான் கடந்தாலும் உங்கள் நினைவு என்றென்றும் எங்கள் இதயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்லஇறைவனை வேண்டுகிறோம்.

என்றும் உங்கள்
பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[சி-9829]

### 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
காசிப்பிள்ளை
கனகலிங்கம்

(உரிமையாளர்:-
திவாகன் கம்பனி,
கொழும்பு - 11.)

அன்னை மடியில்:
16-11-1943

இறைவனடியில்:
15-06-1987

பாசத்துடனும், பண்புடனும் எம்மை நேசித்த உடல் மறைந்துவிட்டது. ஆனால் உயிர் எம்மை விட்டு என்றும் அகலாது.

இன்று (15-07-1987) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, சபிண்டீகரணம் ஆகியவற்றில்கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்.
35/5, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[சி-9813]

## பதவி வெற்றிடம்

பனங்காமம் பற்று பல நோ. கூ சங்கம் வவுனிக் குளத்தில் கீழ்க்காணும் பதவிக்கு இலங்கைப் பிரஜை களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. வண்ணப்பங்கள் யாவும் தலைவர் பனங்காமம் பற்று பல. நோ. கூ. சங்கம், வவுனிக்குளம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 15-8-87 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பபடிவத்துடன் தராதரப்பத்திரப் பிரதிகள், கூட்டுறவு அனுபவசான்றிதழ் பிரதிகள், பிறப்பு அத்தாட்சிப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

பதவி;- பொதுமுகாமையாளர்

சம்பளம்: 500 - 840
...........ம் அரசாங்க சுற்று நிருபத்தின் 20X5,30X8 பிரகாரம் சங்கத்தால் வழங்கப்படும் விசேட படிகளும்.

வயது:- 23 க்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தராதரம்; 1972ம் ஆண்டின் 12ம் இலக்க கூட்டுறவுச் சேவை ஆணைக்குழு சட்டத்தின் கீழான கூட்டுறவு பணியாளரின் சம்பள மீளாய்வு பற்றிய சுற்றுநிருப இலக்கம் 111/82ல் மேற்படி பதவிக்கு குறிப்பிட்ட தராதரங்கள் இருத்தல்வேண்டும். (இச்சுற்று நிருபத்தை அருகாமையிலுள்ள பல நோ. கூ. சங்கங்களில் பார்வையிடலாம்).

கூட்டுறவுச்சேவையிலுள்ள,

நா. பாக்கியநாதன்,
தலைவர்,
பனங்காமம் பற்று பல நோ. கூ. சங்கம்,
வவுனிக்குளம்.

15-7-87. [எ-9730]


## இந்துநாகரிகம்

– க. சி. குலரத்தினம் –

இதழ் இதழாக வெளிவருவன.
முதல் இதழ் வெளிவந்துவிட்டது.
விலை ரூபா ஐந்து.

கிடைக்கும் இடங்கள்:-
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை.
பூபாலசிங்கம் புத்தகசாலை.
பாலமுருகன் புத்தகசாலை, நல்லூர்.
தனலட்சுமி புத்தகசாலை, சுன்னுகம்.
ஓம் முருகா ஸ்ரோர்ஸ், வலந்தலை, காரைநகர்.
மயூரன் புத்தகசாலை, திருகோணமலை.

அடுத்த இதழ் விரைவில் வெளிவரும்.

[சி-9832]



எமது நேற்றைய

## புதிய வெளியீடுகள்

ரஜனிகாந்த் ★ ஜீனத் அமன்

லட்சத்தில் ஒருவன் (V. ட. P)

ராமராஜன் ★ மாதுரி ★ லட்சுமி

இவர்கள் இந்தியர்கள்

### குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23665. சி-1918


## தகவல் தாருங்கள்

வதிரி தாரியப்பத்து அருணசலம் சதாசிவம்-பொன்னம்மா குடும்பத்தினர், வதிரி கர்பூர வளவு கனகசபை பால கிருஷ்ணன் - கமலாதேவி குடும்பத்தினர், அல்வாய் வடக்கு புள்ளிதோட்டம் தனபாலசிங்கம்- பாலபரமேஸ்வரி (மணி) குடும்பத்தினர், அல்வாய் வடக்கு மணிக்கம்பத்தை கந்தையா முருகேசு-தவமணிதேவி குடும்பத்தினர்கள் பற்றிய தகவலை அறிய அவர்களது சகோதரன் கதிர்காமத்தப்பி அருளானந்தன் ஆவலாக உள்ளார் இவர்சள் பற்றிய தகவலை அறிந்தோர் பின்வரும் முகவரிக்கு அறியத்தரவும்.

திருமதி
இ. அருளானந்தன்
நூலகம்,
கிறிஸ்தவக் கல்லூரி,
கோப்பாய்.


# "டிஸ்பிரின் என் நம்பிக்கைத் துணை நடுக் கடலிலும்"



"திரை கடலோடும் என் சிரமமான தொழிலில் காய்ச்சல், தலைவலி, தடிமல், வலிகள், நோவுகள் வந்து விட்டால், சுலபமான, துரிதமான நிவாரணம் கட்டாயம் தேவை.

"நான் அறிந்த காலத்திலிருந்து என் நம்பிக்கைத் துணையாக இருப்பது டிஸ்பிரின். ஏனெனில் அது எப்போதும் சிறப்பான நிவாரணம் தரும். . அதுவும் சீக்கிரமாக! அலைகளை அடக்கி உழைக்கும் நானும் வலிகளிலிருந்து நிவாரணம் தரும் டிஸ்பிரினும் இணைபிரியாத தோழர்கள்- எப்போதும். உலகின் எப் பாகத்திலும்"

திரு. பிரியதர்ஷன் கனகசபை
வாத்தகக் கப்பல் காப்டன்

உலகெங்கும் இலட்சக்கணக்கான மக்கள், வலிகள் காய்ச்சலிலிருந்து துரித நிவாரணம் பெற, நாற்பது வருடங்களுக்கும் மேலாக, டிஸ்பிரினை நம்பி வந்திருக்கிருர்கள். துரிதமான, நிச்சயமான நிவாரணத்துக்கு டாக்டர்கள் அதனைச் சிபாரிசு செய்கிருர்கள். ஏனெனில் டிஸ்பிரின் கரையக்கூடியது.
நம்பிக்கையுடன் பாவியுங்கள் டிஸ்பிரின்.

## டிஸ்பிரின்

துரித நிவாரணத்துக்கு
உலகெங்கும் நம்பப்படுவது




QUEST 1211,

ஒரு றெக்கிட் அன் கோல்மன் தயாரிப்பு

விலை: ஒரு மாத்திரை 50 சதம் வளர்ந்தவர்களுக்கு சிபாரிசு செய்யப்படுகிறது.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 15-7-87

● புலிகளுக்கு ஆயுதங்கள் ● இயக்கங்களுக்கு அங்கீகாரம்

# இலங்கை அரசின் மீது இராணுவ நடவடிக்கை

## வீரமணி இந்திய அரசை கோருகிறுர்

[திருச்சி]

"இலங்கை இனப்பிரச்னை தீர்வுக்கு தமிழீழத்தைத்தவிர வேறுவழியில்லை. எனவே ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசாங்கம் ஆயுதங்களை வழங்கி அவர்களது இயக்கத்தை அங்கீகரிக்கவேண்டும்''

தமிழக அரசும், இந்திய மத்திய அரசிடம் இதனை வற்புறுத்தவேண்டும்.

இவ்வாறு திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் திரு. கே. வீரமணி திருச்சியில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினுர்.

இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கு "பேச்சுவார்த்தை தான்'' என்றுகூறி வீணே காலத்தை தாமதிக்காது இலங்கை அரசுக்கு எதிராக இந்தியஅரசு உடனடியாக இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

இரண்டாவது தடவையாகவும் யாழ். குடாநாட்டின்மீது தாக்குதலை நடத்துவதற்காக இலங்கை இராணுவம் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளது. எனவே இந்தியா இராணுவ நடவடிக்கை எடுகக வேண்டியது அவசியமாகும் என்று திரு. வீரமணிகூறினுர்.

## கொழும்பில் 18 தமிழர்கள் கைது

[கொழும்பு]

வடபகுதி திவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பில் அச்சக உரிமையாளர் ஒருவர் உட்பட 18 தமிழர்கள் கெகல்வத்த பொலிசாரினுல் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி அச்சகம் அரசாங்க அனுமதியில்லாமல் புறக்கோட்டைப்பகுதியில் இயங்கி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது கைதான அனைவரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் டாம் வீதியிலும், பழைய சோனகத் தெருவில் இரு வீடுகளிலும் தங்கியிருந்ததாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை கொட்டாஞ்சேனைப் பகுதியிலும் 500 தமிழர்கள் வரை கைதுசெய்யப்பட்டுவிசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. [சி]

## 'ஈழநாடு' விலை அதிகரிப்பு

பத்திரிகை அச்சிடும் தாள் விலையேற்றம் மற்றும் பத்திரிகைத் தொழில் துறையில் ஏற்பட்டுவரும் இன்னேரன்ன செலவின அதிகரிப்புகள் காரணமாக 'ஈழநாடு' தினசரியின் விலையை 25 சதத்தினுலும்வ வார மலரை 50 சதத்தினுலும் அதிகரிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே வரும் 16-7-1987ம் திகதியுடன் 'ஈழநாடு' தினசரி ரூபா 1 50 சதமாகவும் வாரமலர் ரூபா 2-50 சதமாகவும் விற்கப்படும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றேம்.

நன்றி

நிர்வாகி
'ஈழநாடு'

வீட்டிலிருந்த—

## 6 பேரையும் சுட்ட படையினர் கிடங்கில்போட்டுசென்றனராம்

யாழ்ப்பாணம், புதன்

கரணவாய் வடக்கிலுள்ள வீடொன்றுக்குள்புகுந்த படையினர் அந்தவீட்டிலிருந்த ஆறு பேரையும் வெளியில் இழுத்து சுட்டு அருகிலிருநத கிடங்கொன்றுக்குள் சடலங்களைப் போட்டுவிட்டுச் சென்றதாக தப்பிவந்த அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் செ. திருநாவுக்கரசு [57 வயது] அவரது தங்கை பொன்னம்மா தங்கராசா உட்பட ஆறுபேரே பலியானவர்களாவர்.

மேலும் இச்சடலங்கள் அகற்ற முடியாத நிலையில் தொடர்ந்தும் அவ்விடத்திலேயே கிடப்பதாக தெரிவிக்கப்பட்டது.

## இந்திய மருந்து வகைகளை தவிர்ப்பதுகுறித்து ஆலோசனை

[கொழும்பு]

இந்திய தயாரிப்பு மருந்து வகைகளை இறக்குமதிசெய்வதைத் தவிர்ப்பதில் பொதுவான ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கு சகல முன்னணியிலுள்ள அரச, தனியார்துறை மருந்து இறக்குமதியாளர்களது ஆலோசனைக் கூட்டமொன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தியா இலங்கை வான் பகுதிக்குள் அத்துமீறிச்சென்று யாழ் மக்களுச்கு விமானமூலம் உணவுப்பொட்டலங்களைப் போட்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்தே இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சுயாதீன வைத்தியர்கள் சங்கமும் ஏற்கனவே இந்திய மருந்துவகைகள் இறக்குமதி செய்வதைத் தவிர்க்கவேண்டுமெனக் கோரியிருந்தது.

3000க்குமதிகமான மருந்து வகைகளை இந்தியாவிலிருந்து இலங்கை இறக்குமதி செய்து வருகிறது. இவைகளை குறைந்த விலையில் சீனு, தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யலாமென சுயாதீன வைத்தியர் சங்கம் அபிப்பிராயம் தெரிவித்துள்ளது. இந்தியாவிலிருந்து தற்போது இறக்குமதி செய்யப்படும் மருந்துவகைகள் குறித்து அரசாங்கத்துக்குக் கையளிப்பதற்கு பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்படுவதாக அரச மருந்துக் கூட்டுத்தாபன பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

## புலிகள் சிறைபிடித்த தனது மகனை விடுவிக்க உதவுமாறு இந்தியப் பிரதமருக்கு மகஜர்

[கொழும்பு]

பண்ணை பொலிஸ் நிலைய தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினுல் சிறைபிடிக்கப்பட்ட தனது மகன் பாலித கருணதிலகவின் விடுதலைக்கு உதவுமாறு வேண்டி அவரின் தந்தையார் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு மகஜர் ஒன்றை அனுப்பவுள்ளார்.

இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள அவர் கண்டியிலுள்ள இந்தியத்துணை தூதரகத்துடன்தொடர்கொண்டுள்ளார்.

கடந்த மார்ச் மாத நடுப்பகுதியில் பண்ணை பொலிஸ் நிலையுத்தை தாக்கிய விடுதலைப் புலிகள் பொலிஸ் உத்தியோகத்தரான பாலித கருணதிலக (வயது 22) உட்பட மூன்று பொலிஸாரையும் 6 ராணுவத்தினரையும்சிறைப்பிடித்தனர்.

கண்டியில் கல்வித் திணைக்களமொன்றில் சிற்றூழியராக வேலை செய்யும் சிப்பாயின் தந்தையான தர்மதுங்க (வயது 59) தாம் விரைவில் கடமையிலிருந்து இளைப்பாறப்போவதாகவும் மகனின் பிரிவு குடும்பத்தை பெரிதும் பாதித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட பின்னர் மகனிடமிருந்து தமக்கு மூன்று கடிதங்கள் வந்ததாகவும் அவற்றில் விடுதலைப் புலிகள் தங்களை பராமரித்து, வருவதாகவும் ஆனுல் தாங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து வெளியேறஅனுமதிக்கப்படுவதில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(சி)

## சகல முகாம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிறப்பிக்கப் பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

நெல்லியடித் தாக்குதலையடுத்து மீண்டும் இவ்வாருன ஒரு தாக்குதலுக்குப் போராளிகள ஆயத்தம் செய்துவருகிறுர்கள் என ஆயுதப் படைகள் கருதுவதாகவும், அதனுல் எந்த நிலைமையிலும் சோடை போகாதவிதத்தில் உஷாராக இருக்கும்படி அவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தங்கம்மா

உசன் மிருசுவிலைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி தங்கம்மா காலமானுர். இவர் காலஞ்சென்ற ஓய்வு பெற்ற அதிபர் கதிரேசு சின்னத்தம்பி (தம்பு) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற இராஜசிங்கம், இராஜேஸ்வரி, பாலசிங்கம், பரமேஸ்வரி, இரத்தினசிங்கம், புவனேஸ்வரி, குலசிங்கம், சோதீஸ்வரி, விமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் உசனில் புதன்கிழமை (இன்று) மாலை 5-00 மணிக்குநடைபெறும்

[சி-9847] அறிவிப்பவர்: சி. பாலசிங்கம்.

### செ. திருநாவுக்கரசு திருமதி பொன்னம்மா தங்கராசா

கரணவாய் வடக்கைசேர்ந்த முன்னைநாள் பருத்துறை சிங்கர்தையல்மெஷின் கம்பனி முகாமையாளர் திரு. செ. திருநாவுக்கரசுவும், அவரது சிறியதாயாரின் மகள் பொன்னம்மா தங்கராசாவும் அகால மரணமானுர்கள் இவ்வறிவித்தலை இடம்பெயர்ந்திருக்கும் பிள்ளைகளும், உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி-9842 [சிங்கர்] கந்தசாமி. [மருமகன்].

### தம்பு பவளராஜா

தம்பு-பூரணம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் பவளராஜா (உதவி சுங்கசேகரிப்பாளர்) காலமானுர். அன்னுர், நேசம்மாவின் அன்புக் கணவரும், நிர்மலா, நளினி, சுதர்சன் (ஐரோப்பிய நாடுகள்), கலாசசி, ஷர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிந்துஜா, பிரசாத் ஆகியோரின் பேரனும், சிவபாலன்(இலங்கை வங்கி), வைகுந்தவாசன் (ஜெர்மனி) ஆகியோரின் மாமனுரும், பவளேஸ்வரி, தம்பிஐயா, கமலராணி, தங்கராசா ஆகியோரின் சகோதரரும், தம்பிஐயா (கூட்டுறவு உதவி ஆணையாளர், மன்னுர்), துரைராஜா (பொலிஸ் பரிசோதகர், மருதானை, தங்கராஜா(உதவிப் பொலிஸ் பரிசோதகர்,புறக்கோட்டை), ஆனந்தராஜா, அழகரெத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னுரின் இறுதிக் கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் புதன்கிழமை (இன்று) பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்.

தகவல்: மகன் ப. சுதர்சன்
60/8, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி-9846)

எதிர்க்கட்சிகள் என்னதான் கத்தினுலும்

## உரியநேரத்தில்தான் பொதுத்தேர்தல் நடக்கும்

### ஜனுதிபதி கூறுகிறுர்

(நமது நிருபர்)

எதிர்க்கட்சிகள் என்னதான் கூக்குரலிட்டாலும்குறிப்பிட்ட தினத்துக்குமுன் பொதுத் தேர்தல் வைக்கப்படமாட்டாது. ஜனுதிபதியை பதவி விலக்குவதானுல் அவர் நோயாளி, பயித்தியக்காரர், அல்லது மோசடிக்காரராய் இருக்கவேண்டும். அதுவும் கூட பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபங்குஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நீதிமன்றத்தினுல் ஏற்றுத் தீர்ப்பு வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு கட்டுகம்பவவில் பன்னவ என்ற இடத்தில் பொதுச் சந்தைவொன்றைத் திறந்து வைத்தபின் பேசுகையில் குறிப்பிட்டார்.

தீவிரவாத நடவடிக்கைகள் இந்த நாட்டில் இல்லாதிருந்தால்இந்நாட்டில் நாம் பெரும் அபிவிருத்திகளை செய்திருக்க முடியும். நாட்டின் அபிவிருத்திக்குச் செலவிடவேண்டிய பணம் பெருமளவில் பாதுகாப்புக்காக செலவிடப்படுகின்றது என்று ஜனுதிபதி கூறினுர்.

நீதியமைச்சர் திரு. நிஸங்கா விஜேவர்த்தனு பேசும்போது, திருமதி பண்டாரநாயக்க பல் வேறு பிரச்னைகளைக் கிளப்பி அரசுமீது குறைகூறிவருகின்றுர். நாடு கடந்த பத்தாண்டு காலத்தில் ஏற்பட்டுவந்துள்ள அபிவிருத்திகளைக் கண்டு பொறுக்கமுடியாமலே இவ்வாறு செய்துவருகிறுர் என்றும் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone: — 22389, 24126.